Regd. No, M

விலை அணா 1

முரசொலி

தமிழ் வார வெளியீடு....

ஆசிரியர் மு. கருணாநிதி

திராவிடன் ஆசிரியர்:
தோழர்- N. V. நடராசன்

முரசு 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, மாசி 20. (3-3-48) புதன்கிழமை [ஒலி 8

இராவணன் நம்பாட்டன்

(சேரன்)

கொசுவின் தாயகம். உயிர் குடிக்கும் பல்வகைப் புழுக்களின் பிறப்பிடம். கண்ணால் காணமுடியாத தொலைவிலேயே மூக்கைப் பிடித்துக்கொள்ளக் கூடிய நாற்றம். கழிவுப்பொருள்களின் முடிவிடம். ஆபாசத்தின் எல்லை. இம்மாதிரி ஒரு குட்டையைக் காணுகிறான் மனிதன். ஆகா! இதோ நெளியும் புழுக்களின் நேர்மைதான் என்னே... பரத நாட்டியமாடும் பாவையரைப் போலல்லவா வளைந்து வளைந்து ஓடுகின்றன. பகவானின் படைப்பே; படைப்பு! இந்த மணத்தை எங்கும் நுகர்ந்திட முடியாதே என்று கூறி அந்த சேற்றிலே விழுந்து புரளுகிறான்,

அடுத்த மனிதன் குட்டையின் நாற்றத்தைப் போக்கினால் பலன் உண்டு எனக் கூறுகிறான். வாசனைப் பொருள்களை அச்சிறு குளத்திலே ஊற்றினால் பயன் கிடைக்குமென்பது அவன் முடிவு.

மூன்றாவது மனிதன் குட்டையின் தண்ணீரையெல்லாம் இறைத்துவிட்டுக் குட்டையைக் குளமாக்கி புதுத் தண்ணீரைப் பாய்ச்சி தக்கதோர் மருந்து கலந்தால் மக்களுக்குப் பயன் தரும் என்கிறான்.

இந்த மூன்றுவகைத் தோழர்களில் உங்கள் 'ஓட்' யாருக்கு என்பது என் கேள்வியல்ல! மேலே குறிப்பிட்ட நாற்றக் குட்டையாக நமது தமிழ்நாட்டுக் கலை அமைந்துள்ளதே அதைத் திருத்த வேண்டாமா என்பதுதான் பிரச்சினை. இந்தப் பிரச்சினையை மீண்டும் கிளப்பவேண்டிய அவசியத்தை ஒரு தோழர் ஏற்படுத்தியுள்ளார். பிழைப்புக்கும் செல்வாக்குக்கும் பாதை அமைத்துக் கொள்வதற்காக ஒரு சிலர் கலைக் குட்டையிலே விழுந்து புரளுவது எனக்குத்தெரியும். சேறு அவர்களுக்கு சந்தனமாகவும், சேற்றிலே கிளம்பும் நாற்றம் அவர்களுக்கு மல்லிகையில் மோதி வரும் தென்றலாகவும் தோன்றுகிறதாம். அவர்களைத் திருத்தவோ அல்லது திருப்பவோ நினைப்பது நாயின்வாலை நிமிர்க்க நினைப்பது போலத்தான் என்பதும் எனக்குப்புரியும். புரிந்த போதிலும் இவர்களுடைய வலைவீச்சில் திராவிட இளைஞர்கள் சிக்கிவிடலாகாது என்பதற்காகவே; "பாம்பே! கடிக்காமலிரு! தேளே!கொட்டாமலிரு!" என்று அஹிம்சா உபதேசம் செய்வதைவிட அவை 'விஷஜந்துக்கள் விலகிப்போங்கள்' என்று எச்சரிக்கை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளேன்.

வாழை, மா, பலா என்ற முக்கனியின் கூட்டில் வசிய மருந்து கலப்பதுண்டு. வண்ணப் புதுச்சேலை-வாலிப மேற்பூச்சு இவைகளோடு, வயதேறிய மாது வலைவிசுவதுண்டு.

இந்த வகையைச் சேர்ந்த கட்டுரையொன்றை நான் காண நேர்ந்தது, ஆர். எம். அழகப்ப செட்டியாரை ஆசிரியராகக் கொண்ட "குமுதம்" என்ற மாத வெளியீட்டில ஒரு கலாரசிகர். தீட்டியுள்ளது. கட்டுரையின் தலைப்புஇராவணன் நம்பாட்டன்

அண்ணாதுரையின் முன்!

தலைப்பைக்கண்டதும்.........
அழகப்பாவின் பத்திரிகையிலும் இன உணர்ச்சி வாடை வீசுகிறதே என துள்ளிக் குதித்தேன். நான் நினைத்தது முழுத் தவறு என்பதை மெய்ப்பிப்பது போல் தலைப்பின் ஓரத்தில் பத்துதலை இராவணன் படம் விளங்கிற்று. இருந்தாலும் தலைப்பிலே கலந்திருந்த அந்த இன உணர்ச்சி என்னைப் படிக்கத் தூண்டிற்று. இராவணன் நம் பாட்டன்! ஆகா! தென்னிலங்கை வேந்தன்—தீராதி தீரன்—திராவிடரின் மூதாதை-அவனை நம் பாட்டன் என்று உரிமை கொண்டாடும் உண்மைத் தோழனுக்கு குமுதத்திலே இடமா? எனக் கூத்தாடிற்று என் உள்ளம்.

படிக்க ஆரம்பித்தேன்; "தோள் கண்டார் தோளே கண்டார்" என்ற கம்பனின் வர்ணனையைத் துவங்கி யிருந்தார் தோழர்! இராவணன் நம் பாட்டன் என்று கூறிவிட்டு இராமனின் அழகை வர்ணிக்கும் கட்டத்தில் நிற்கிறாரே ஏன் என்று எனக்கு முதலில் புரியவில்லை. கம்பரின் வர்ணனையைப் புகழ்ந்து ...அடடா! கடவுளீயக் கலையை சிருஷ்டித்திருக்கிறாரே கம்பநாட்டாழ்வார் எனக் காவடிச்சிந்து பாடுவதோடு கட்டுரையாளர் நிறுத்தி விடுவார்; கம்பர் தரும் காட்சி, கம்பசித்திரம், சித்திர ராமாயணம் இந்த வர்க்கத்தைச் சேர்ந்த இழைப்பு வேலையாக இருக்கும் இதுவென எண்ணினேன். ஆனால் கட்டுரையாளர், வாலிபனை மயக்க வண்ணப்புதுச் சேலை யுடுத்திவந்த வயோதிக மாது என்பதை நன்றாக நிருபித்துக் கொண்டுள்ளார்.

"கலை என்னும் கடவுள்பொருளின் உண்மை இயல்பை உணர்ந்துவிட்டால் இந்தப் பிணக்குக்கு கலையுலகில் இடமில்லை. அவரவர் நிலைக்கு ஏற்ப அமைந்ததோர் அழகுக் கோலம் தாங்குவது கலை. ஒருவர் காட்சி மற்றவர்க்கு ஏலாது. இதை உணர்ந்தால் **எரிக்கும் வெறியும் தீர்க்கும் வெறியும்** கலையுலகில் இடம் பெற மாட்டா"

ஆசிரியர் புகுத்தியுள்ள கருத்து இது!.....இதைத்தான் கனிச்சாற்றில் கலந்த 'வசிய மருந்து' என நான் கூறுகிறேன். சோற்று உருண்டையைக் காட்டி மீனைத் தூண்டிலில் சிக்க வைக்கும் சூழ்ச்சியைப் போல் இராவணன் நம் பாட்டன் என்ற தலைப்பைக்காட்டி கம்பர் கலையெனும் தூண்டில் முள்ளில் இளைஞர்களை சிக்கவைக்க முயற்சிக்கிறார் தோழர்.

பசுமலை பாரதியும், பண்டித சேதுப்பிள்ளையும் நிற்கமுடியாத இடத்திலே நிற்க நினைக்கிறார் தோழர். சரிந்து விழுந்த கம்பராமாயணக்கட்டிடத்தைப்புதுப்பிக்க சாரம் கட்டுகிறார் அன்பர். பாவம் பரிதாபத்திற் குரியவர். "கலைவாழ்க! ஆனால் கலை, நாற்றக் குட்டையாக-புழுக்கள் நெளியும் இடமாக உள்ள நிலை ஒழிக!" இதுதான் பகுத்தறிவாளனின் பாசறை முழக்கம். இந்த முழக்கம் முன்னமேயே கம்பர், சேக்கிழார் போன்ற இனத் துரோகிகளின் முதுகெலும்பை முறித்துவிட்டது என்பதை நண்பர் அறிந்திருந்தும் நச்சுப்பல்லை நீட்டியிருக்கிறார். ஆபாசக் குட்டையின் அழுகல் நாற்றத்தை அந்திமல்லிகையின் வாடையெனக் கூறும் ரகம் இவர்! முகத்தின் சுருக்கங்களை முக்காட்டால் மறைத்துக்கொண்டு என் முல்லைச் சிரிப்பைப் பார் எனக் கூறும் மூதாட்டிக்கும் தோழரின் கட்டுரைக்கும் முரண்பாடிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. குட்டையின் நாற்றத்தை அகற்ற அத்தரும் ஜவ்வாதும் போடு எனக் கூறுகிறவரின் வரிசையில் கூட தோழர் இடம் பெறுதது வருந்தத் தக்கது.

தீர்க்கும் வெறி கலை யுலகில் இடம்பெறக் கூடாது என தோழர் கூறுவதிலிருந்து நாற்றக் குட்டையில் வாசனைப் பொருள் கலப்பவரின்வரிசையில் கூட நிற்கமுடியாமல் வழுக்கி விழுந்து டி. கே. சிதம்பரநாதர்களின் மேலும் சிறிப் பாய்கிறார் என்பது விளங்குகிறது.

எரிக்கும் வெறி என எழுதியதால் சுயமரியாதை இயக்கத்திற்கு சூடு கொடுத்துவிட்டதாக அன்பர் சொல்லிக் கொள்ளலாம். அழகப்பாவின் 'அப்ளாசை'யும் பெற்றிருக்கலாம். கையிலிருப்பது பேனா என்பதுகூட தெரியாமல் கலை போதையில் கிறுக்கியிருக்கிறார் ஆசிரியர்!

கம்ப ராமாயணத்தைக் கொளுத்துவதா? இல்லையா? என்ற சொற்போரில் அறிஞர் அண்ணாதுரையை எதிர்த்து மேடையில் நிற்க முடியாமல் சேதுப்பிள்ளைக்குத் தலைவலியும், சோமசுந்தர பாரதியாருக்கு பிரயாண அவசரமும் ஏற்பட்டதை 'இந்தக் கலைக்காதலர் மறந்து விட்டது மாபெரும் ஆச்சரியம்.

(7-ம் பக்கம் பார்க்க)

பெவின் கனவு!

(ஆரூரான்)

"ஐரோப்பா நாடுகளே வாருங்கள்! கூடிக் குலாவி மகிழ்வோம், நமக்கு ஏற்படும் இன்ப துன்பங்களிலே பங்கு ஏற்போம், நாம் நன்கு வாழவேண்டுமானால் நமக்குள் ஒற்றுமை வேண்டும்— அதற்கு ஒரே வழி நாம் யாவரும் கூடிவாழ்வதே. அதற்கு நான்காட்டும்பாதையே "ஐரோப்பிய நாடுகள் யூனியன்!" என்று தேன் சொட்ட கடந்த ஜனவரி 22ந் தேதி லண்டன் பொதுச் சபையில (House of Commons) பிரிட்டன் வெளிநாட்டு மந்திரி பெவின் பிரபு பேசினார். அவருடைய பேச்சில் அபார அன்பும், அண்டினோர்க்கு ஆதரவும், அண்டாதாரை வலிய அணைக்கும் பரிவும் தென்பட்டது! இவ்வளவு 'அபார பரிவு' திடீரென உதயமானதைக் கண்டதும் திகைப்பு உண்டாவதற்குப் பதில் அவரின் தெகிடுதத்த எண்ணங்கள் பளிச்சென்று தென்படலாயின! காரணம் பொதுவுடைமைப் பாதையை உலகெங்கும் படிப்படியாக அமைக்க ரஷ்யா முயன்று வருவதும், பொதுவுடைமை புக ஆரம்பித்தால் எங்கே தமது போக போக்கியங்கள், சுயநல வாழ்வு, முதலாளித்துவ முறை, அத்தனையும் பொடிப் பொடியாகிவிடுமோ வென அமெரிக்கா பயந்து, அதற்கான தந்திரங்கள் செய்துவரும் வேளையில் வலிந்து 'வருக தோழனே, வாழ்வோம்!' என்று பிரிட்டன் அண்டை அயலிலுள்ள நாடுகளை ஒரு கூட்டு முன்னணிக்கு அழைப்பதில் தந்திரம் இல்லாமலில்லை!

மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் வலையில் பிடித்துப் போட வலைவீசு முகத்தான் அமெரிக்கா 'மார்ஷல் திட்டம்' என்று ஒன்றை சிருஷ்டித்து வைத்துக் கொண்டு "யார் கேட்டாலும் பணம், எந்த நாடு உதவி வேண்டுமென கோருகிறதோ அதற்கு வேண்டிய அளவில் உதவி செய்கிறோம்" என்று கூறிவருகிறது.

அமெரிக்கா பண ஆசை காட்டி பசப்புவதும், பிரிட்டன் பிரிய மொழிகூறி அணைந்து வாழ்வோம் என்றழைப்பதும் ஐரோப்பிய நாடுகளை தங்கள் கூட்டு முன்னணியில் சேர்த்துக் கொண்டு பொதுவுடைமை ரஷ்யாவை எதிர்க்கும் நோக்கமேயாகும். சான்று வேண்டுமானால் பெவின் தன் திட்டத்தை வெளியிட்டபின், சேர அழைக்கப்படும் எந்த நாடும் எதுவும் கூறுமலிருக்கும் பொழுதே 'அண்ணனுக்கு தம்பி பரிந்து பேசுவது போல' அருமையான திட்டம் என்று அமெரிக்கா 'சர்ட்டிபிகேட்' கொடுத்திருக்கிறதே போதும்!

இன்று மேல் நாட்டிலுள்ள கருத்து முதலாளித்துவ முறை மூழ்கடிக்கப படாமலிருக்க என்னென்ன மகேந்திர ஜாலங்கள் செய்வது என்பதுதான்!

மார்ஷல் திட்டத்தின் பயனாக, அமெரிக்கா, ஆசியாவிலுள்ள சீனாவுக்கு தளவாட உதவியுட்பட பல வழிகளிலும் உதவி செய்து வருகிறது.

சீனாவில் சீன கம்யூனிஸ்ட்டுகளுக்கும் முதலாளித்துவ மனப்பான்மை கொண்ட சியாங்கே ஷேக்கை தலைமையாகக் கொண்ட சீன சர்க்காருக்கும் பலத்தபோர்-சீன கம்யூனிஸ்ட்டுகளுக்கு ரஷ்யாவின் உதவியும் சீன சர்க்காருக்கு அமெரிக்காவின் உதவியும் கிடைத்து வருகிறது. அமெரிக்கா உதவியளித்தும் சீன சர்க்கார் படைகள் 'வெற்றிகரமாக' வாபஸ் ஆகிக் கொண்டே வருகின்றன.........

குறிப்பாகக் கூறவேண்டுமானால் உலகில் முதலாளித்துவ பாம்பரை ஒழிக்கப்படும் போக்கை எப்படி எதிர்த்து நிற்பது— எப்படி ரஷ்யாவை ஒழிப்பது— என்பதில் அமெரிக்காவும் பிரிட்டனும் தோளொடு தோளிணைந்து வழிகள் காண முயலுகின்றன...............

உலகப்போக்கைப் பார்க்கையில் 'மார்ஷல் திட்டம் கவைக்குதவாது' 'பெவின் திட்டம் பேச்சு மூச்சற்றுப் போய்விடும்' என்றே கூறலாம்!

பராசக்தி.

பாவலர் பாலசுந்தரம் அவர்களின் எழுத்தோவியம் பராசக்தி நாடகம்.

கும்பகோணத்தில் தேவி நாடகசபையில் நடைபெறுகிறது

பழமை-பணச் செருக்கு பாமரத்தன்மை இவைகளுக்கெல்லாம் சவுக்கடி கொடுக்கும் வசனங்கள், தேனூறும் தீஞ்சுவைத் தமிழ்ப் பாடல்கள்.

கல்லிதயம் படைத்தவரையும் கலங்கச்செய்யும் கதைப்போக்கு.

சில நடிகர்களால் ஏற்படும் குறைகளைத் தவிர வேறு குற்றமில்லாத ஒரு புதுமை நாடகம்.

1—3—48 திங்கட்கிழமை முதல் திருவாரூர் பிரபாத்தில், கன்னிகா

கண்டதும் காதல் ஒழிக!

(சீனிவாச ராகவன்)

'மிஸ்டர் சேகர்! இவர்தான் சுந்தரி' என்றார் இடையிலிருந்தவர். சுந்தரியின் புன்னகையும்—சேகரின் குளிர்பார்வையும் அவனை அறிமுகப்படுத்துவதற்கு முன் கை குலுக்கிக்கொண்டன.

'இவர்தான் கேப்டன் சேகர்' என்றார் அறிமுகப்படுத்தும் ஆசாமி.

விருந்து ஆரம்பமாயிற்று

சேகர் ராணுவத்திலே சேர்ந்து ஒன்பது வருடங்கள் ஓடிவிட்டன. அவனுடைய பதினாறாவது வயதில் பட்டாளத்து நுழைவு ஏற்பட்டது. இடையிலே நடந்த போர் அவன் வலிமையைக் காட்டிக்கொள்ள நல்லதொரு வாய்ப்பாயிற்று. 'கேப்டன்' பதவி வரையிலே உயர்ந்தான். அதற்குப் பிறகுதான்... அவன் பெற்றோர்களிடமிருந்து வந்த நூற்றுக்கணக்கான கடிதங்களில் காணப்பட்ட "ஒரு வாரமாவது வந்து தங்கிவிட்டுப்போ" என்ற அன்பழைப்பு அவன் கண்களில் பட்டது. அதையெல்லாம் விட அவன் எட்டு வயதில் விட்டுப்பிரிந்த தங்கை தனலட்சுமியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை......தாங்க முடியாததாயிருந்தது. ஒருவாரம் ஊரில் தங்கிவிட்டு வருவோம் என்ற நினைப்பில் புறப்பட்டான், பம்பாயிலிருந்து! வழியில் சென்னையில் அவன் தோழர்களால் விருந்து அவனுக்கு!

சென்னை பிரசிடென்சி காலேஜில் பி. ஏ. படிக்கும் சுந்தரி, நண்பர்களின் தொந்திரவு தாங்க மாட்டாமல் தன் தோழி பிரேமாவுடன் விருந்தில் கலந்துகொண்டாள். சுந்தரிக்கு காலேஜில், புளுபேர்ட் (Blue Bird) என்ற பட்டம்; அவ்வளவு அழகி. அவள் கன்னங்களை ஆப்பிள் வண்ணம் என்றவர்களும்...கோவைக்கனி என்றவர்களும் தங்கள் உபமானங்களுக்கு ஆதாரம் தேட முற்படுவார்கள். ஆப்பிள் ஆங்கிலமொழி அதனால் அந்நியர் உபமானம் என்று அது தள்ளுபடி செய்யப்படும். கோவைக்கனி அளவுக்குமீறிய சிவப்பு; அது சரியல்ல என்பார் ஒரு நுணுக்கவாதி! சுந்தரியைப் பற்றிய வர்ணனைக்கு உபமானம் தேடுவதில்...கையால் தொடாமலிருந்த கம்பராமாயணம் கூட ஓரளவுக்கு மனப்பாடம் ஆகிவிடும் மாணவர்கள் சிலருக்கு!

விருந்து முடிந்தது.

சேகர்-சுந்தரி விடைபெற்றுக்கொண்டார்கள். அவளோடு வர மறுத்த அவள் கண்களை சுந்தரி பிடித்து இழுத்துக்கொண்டு சென்றாள். சேகர், 'தன் நெஞ்சத்தைத் தூக்கிக்கொண்டு போகிறாளே இந்த வஞ்சி' யென்று முணுமுணுத்துக்கொண்டான்.

"கண்டதும் காதல்! ஆகா எவ்வளவு களிப்புத் தருகிறது இந்த சந்திப்பு!" சேகர்—சுந்தரி இருவர் உள்ளத்திலும் இந்த இன்ப அலைகள்!

இரவு...சுந்தரியின் விடுதியில் சேகர் நுழைந்தான். அவள் தூங்கவில்லை. கண்டதும் காதல் அவளைத் தூங்கவிடவில்லை. திருக்குறள் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். காமத்துப்பால் அதிகாரம் ௱௰ என்பதை சேகர் பார்த்துவிட்டான்.

'கண்ணொடு கண் நோக்கின்' என்று சேகர் பேச்சை ஆரம்பித்தான். சுந்தரியின் குரல் தழுதழுத்து விட்டது. திருக்குறள் புத்தகம் மூடப்படாமல் கீழே விழுந்தது.

"சுந்தரி!" ஒரு பெண்ணின் குரல்! பிரேமா உள்ளே நுழைந்தாள். சேகர் விலகி உட்கார்ந்தான்.

"ஊருக்கு எப்பொழுது போகிறாய்?" எனக் கேட்டுக்கொண்டே பிரேமா அமர்ந்தாள். விடைபெற்றுக்கொண்டு வெளியே செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது சேகருக்கு! "நாளைக்கு ஊருக்கு செல்கிறேன்" என்று பிரேமாவிடம் சுந்தரி கூறினாள். உண்மையிலேயே அந்தச் செய்தி சேகருக்காக சொல்லப்பட்டது தான். சேகர் போய்விட்டான்; சோக முகத்தோடு!

மறுநாள் சேகர் சொந்த ஊர் புறப்பட வேண்டியதாயிற்று. ஊரில் ஒரு வாரம் தங்குவதைக் கூட குறைத்துக் கொண்டு இரண்டே நாட்களில் சென்னை திரும்பவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். எல்லாம் சுந்தரியின் செயல்தான்!

"தம்பி! வாடா என் கண்ணே!" என்ற தாயாரின் அன்புக் கூச்சலோடும்...ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் அப்பாவின் வரவேற்போடும் சேகர் உள்ளே நுழைந்தான்.

"தனம் எங்கே?" என்பது தான் அவன் முதல் கேள்வி.

"காலையிலேயே வந்துவிட்டாளே!.........தனம்! தனம்!" என்று ஆவல் ததும்ப அழைத்தாள் அன்னை.

அண்ணனைப் பார்க்கவேண்டுமென்று புது ஆடைகள் உடுத்திக்கொண்டிருந்த தங்கை மாடியிலிருந்து அவசர அவசரயாக கீழே பறந்தாள்.

“தனம்” என்றான் ஆசையோடு சேகர்!

“அண்ணா” என்றாள் அவள்!

இருவரும் திகைத்து நின்றுவிட்டார்கள். சேகரால் பேசமுடியவில்லை. சற்று நிதானித்துக்கொண்டு “அப்பா! தனம் திருச்சியில் தானே படித்துக்கொண்டிருந்தது?” என்று கேட்டான்.

“ஆமாம்!..........ஆனால் உன் மாமாவுக்கு சென்னைக்கு மாற்றலாகி இரண்டு வாரமாகிறது. தனமும் சென்னை காலேஜில் சேர்ந்துவிட்டாள்” என்றார் தந்தை

“நீ வருகிறாய் என்று கடிதம் எழுதியிருந்தோம்... லீவு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறாள்”...என்று சொல்லிவிட்டு ...“தம்பி! தனத்துக்கு காலேஜ் பெயர், சுந்தரி!” என்று முடித்தாள் தாயார்.

“தங்கையிடமா காதல்?” என்று தவித்தான் சேகர்.

“அண்ணனிடமா; இந்த அன்பு?” என்று வெதும்பினாள் தனம்.

நல்லவேளை...அன்று இரவு பிரேமா பிரவேசித்தாள் என்று தங்களைத் தேற்றிக் கொண்டார்கள் இருவரும்!

இந்தவிபரீதத்திற்கு காரணம்?...

“காலேஜ் பெயர் மாற்றம்” என்றது அவசர புத்தி!

“இல்லை! கண்டதும் காதல்!” என பதில்கூறியது நிதானபுத்தி.

“கண்டதும் காதல் ஒழிக!” என்று முணுமுணுத்தார்கள் அண்ணனும் தங்கையும்! ★



வெற்றியின் ஆரம்பம்?

பிப்ரவரி 28ல் சென்னை சட்டசபையில் தோழர் வி. ராகவய்யா என்ற ஆரிய அன்பர் “வகுப்புவாத ஸ்தாபனங்களை இந்திய சர்க்கார் தடைசெய்து உத்தரவு பிறப்பித்திருக்கிறதே மத வகுப்பு வாதம், ஜாதி-வகுப்புவாதம் எனப்பிரித்து வேற்றுமை பாராட்ட சென்னை சர்க்கார் விரும்புகிறதா? இந்த வேற்றுமைகளை சர்க்கார் ஒழித்துவிடுமா?” என்று கேட்க அதற்கு மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் பிராமண ஜாதியினரே வகுப்புத் துவேஷத்திற்குப் பொறுப்பாளிகள் என்று பதில் கூறியிருக்கிறார்

திராவிடகழக தோழர்களே! மந்திரியார் சரியானபதில் கொடுத்தார் என்று நாம் மனஆறுதல்பெற வழியில்லை. ஏனெனில் அவரையறியாமல் வந்த உண்மையிது! ஆரிய ஆதிக்கத்தின் கிடுக்கித் தாக்குதல் அதிகமாக அதிகமாக அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும் என்றபழமொழிக்கிணங்க...மந்திரிசபை திராவிடர் கழகத்தின் மேலும் அடக்குமுறைப் பாய்ச்சல் நடத்த ஆரம்பிக்கலாம்,

நாம் குற்ற மற்றவர்கள்—காந்தியாரின் ‘அஹிம்சை’க் கொள்கையை அவரது சிஷ்யர்களைவிட அதிகமாக உண்மையோடு கடைப்பிடிக்கும் பெரியார் ஈ. வெ. ராவைத் தலைவராகக் கொண்டவர்கள், எவ்வளவு அல்லல்கள் அடுகிவரினும் அமைதியை இழக்காது கொள்கைக்காக உயிர் நீத்த உத்தமர்களின் பாதையிலே வைத்த காலை யெடுக்காமல் நடப்போமாக.

வெற்றியின் ஆரப்பம் அதுவென மகிழ்வோமாக!

★ ★ ★

திருவாரூரில் காந்தியார் அனுதாபம்.

29—2—48 மாலை தோழர்கள், V. G. அரங்கராசு,
R. சிங்கம், A. முத்துகிருட்டினன்,
ஆகியோர் தலைமையில் மௌன ஊர்வலம்
அனுதாப கூட்டம் நடைபெற்றது.

முரசொலி
திருவாரூர்

பெரியார் ஆண்டு 69. மாசி 20
புதன் 3—3—48.

அவரது தோல்வி!

"இந்த சட்டிக்குப் பதில் சொல்! இல்லையேல் கேடயத்தை எறிந்து விட்டு தூரப்போ! புறமுதுகுகாட்டு!"

போர்க்களத்திலே ஒரு படைத் தலைவனின் முதல் முழக்கம் இது!

"சட்டியை எடுத்து விட்டேன் ...குறியும் பார்த்து விட்டேன். உயிர் வேண்டுமானால் ஓடிவிடு"

அதே தலைவனின் இரண்டாவது அபாய அறிவிப்பு.

"சட்டியை எறியப் போகிறேன், எதிர்ப்படைத் தலைவா! சரணாகதியடைந்து விடு......... வீணே சாகாதே"

அதே தளபதியின் மூன்றாவது எச்சரிக்கை!

இப்படி வீரகர்ச்சனை யெழுப்பிக் கொண்டிருந்த தளபதி, திடீரென்று 'ஐயையோ! அப்பாடி!. ஓடிவிடுகிறேன் அடிக்காமல் விடு......' என்று அலறினால் எப்படியிருக்கும்?

எப்படியிருக்கும்......'தமிழர் நாடு' பத்திரிகைபோல இருக்கும் என்று தான் எதிரொலி கேட்கும்.

"தமிழர் என்போர் பித்தலாட்டக் கருங்காலிகளே என்றும், தமிழர்—தமிழரசு என்பது ஒன்று அறியாமையாக இருக்கவேண்டும் அல்லது பித்தலாட்டமாக இருக்கவேண்டும். 'இவர்களைக் கருங்காலிகள் என்றே கூறுவேன்' என்று பெரியார் அவர்கள் துணிந்து இழித்துக் கூறி, இது நான்காவது வாரம்."

தமிழர்நாடு பத்திரிகையிலே தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் விடுத்த அறிக்கை மேலே காண்பது.

தமிழர் என்போர் கருங்காலிகள் என்று பெரியார் திட்டியதை உடனே 'வாபஸ்' பெற வேண்டும்.

அடுத்து 'தமிழர் நாட்'டில் வெளிவந்த உபதேசமிது.

தமிழர்களை பெரியார் திட்டி நான்கு வாரமாகிறது. பெரியார் உடனே வருத்தம் தெரிவிக்காவிட்டால் தமிழர்களின் பதில் என்ன தெரியுமா?

விசுவநாதம் அவர்கள் முழங்கின அபாய அறிவிப்பு சங்கு இது!

பெரியாரை 'வாபஸ்' பெறச் செய்து தோல்வியிலே தள்ளுவதற்காக கனல்தெரிக்க எழுதி ...களத்திலே கச்சை கட்டி நின்ற தோழர் விசுவநாதம் "நான் நிராயுதபாணி! தெரியாமல் சண்டைக்கு வந்து விட்டேன்" என்று சரணடையும் படைத்தலைவனைப் போல காட்சி தருகிறார்.

"பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தமிழரென்போர் பித்தலாட்டக்காரர்கள்-கருங்காலிகள் என்று கூறி வைததற்காக அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று நான் விரும்பினேன். ஆனால் அவர் வருந்தவில்லை. நான் வருந்தினேன். இனி இச்சொற்களோடு தமிழரென்போர் சுயநலக்காரர்கள், மோசக்காரர்கள், உணர்ச்சி, அறிவு அற்றவர்கள், மானம், வெட்கம் அற்றவர்கள் என்பவைகளையும் சேர்த்து வைவதற்கு பெரியாரைப் போல இன்னும் சிலர் தேவையெனத் தோன்றுகிறது. காரணம் அப்பொழுதாகிலும் தமிழர் என்பவர்களுக்கு உணர்ச்சி தோன்றுதா? என்ற ஆசைதான்."

பெரியாரை மன்னிப்புக் கேட்கும்படி பூச்சாண்டி காட்டிய விசுவநாதத்தின் பேனாதான் இதையும் எழுதியிருக்கிறது... அதே 'தமிழர்நாடு' ஏட்டிலே!

"எனது தோல்வி" என்ற தலைப்பில் தோழர் கி. ஆ. பெ. அவர்கள் சோக சித்திரம் ஒன்றை தீட்டியுள்ளார். அனுதாபத்திற்குரிய அபயக்குரல் அது!

பல்லில்லாத கிழவன் பல்லைக் கடித்துப் பயமுறுத்தும் பாசாங்குபோலில்லாமல்...மீசையில்லாதவன் வெறுங்கையை முறுக்கிக் காட்டுவது போலில்லாமல்...... பேசத் தெரியாதவன் பெருங்கனைப்புக் கனைத்துக் கொண்டு மேடையிலே நின்று முறைப்பது போலில்லாமல்......அன்பர் கி. ஆ. பெ. அவர்கள் தோல்வி கண்டுவிட்டோம் என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொண்ட பிறகும்...வெற்றி எட்டுத்திக்கு மெட்டக்கொட்டுமுரசே என்று வீரப்பண் பாடி...வெறும் ஜம்பம் அடித்துக் கொள்ளாமல்... **மோசம் போனேன்—முயற்சித்தேன்; ஏமாந்தேன்—தோல்வியடைந்தேன்—தனித்துத் தொண்டாற்ற முடியவில்லை—'தமிழர் நாடு' தொண்டையும் தமிழர் கழகத் தொண்டையும் இன்னும்**

நான்கு வாரங்கள் அதாவது மார்ச்சுமாதக் கடைசியோடு முடித்துக்கொள்ள எண்ணியிருக்கிறேன் என்று தோல்வியை ஒப்புக்கொண்ட அவர் உண்மை உள்ளத்திற்கு நமது உண்மையான பாராட்டுக்கள் உரியதாகுக. வசை பொழிந்தாலும் தமிழர் என்பவர்களுக்கு உணர்ச்சி தோன்றாதா என்ற ஆசையில் தான் நான் திட்டுகிறேன் என்று குறிப்பிடுகிற தோழர் விசுவநாதம்......பெரியாரும் அதற்காகத்தான் உரிமையோடுதிட்டுகிறார் என்று உணர்ந்திருந்தால்...இவ்வளவு சீக்கிரத்தில் இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்காது.

"தமிழ் வாழ்க என்று ஒலிக்கவும் தமிழ்நாடு தமிழருக்கே என்று முழக்கவும் தமிழ்க்கொடி உயர்த்தவும் தமிழ் மக்களே வெட்கப்படுகின்ற நிலைமை தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. இப்படிப்பட்ட மக்களுக்கென ஒரு கழகமும் ஒரு இதழும் தேவைதானா என்பது எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்"

இதுவும் 'தமிழர் நாடு' தலையங்கப் பகுதிதான்.

இங்கேதான் பெரியாரையும் விசுவநாதத்தையும் நிறைபோட்டுப் பார்க்கவேண்டிய நிலை.

தமிழர் கழகத்தை தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லையென்பதற்காக தன் பணியை நிறுத்திவிடுகிறேன் எனக் கூறுகிற விசுவநாதத்தையும்—சுயமரியாதைக் கொள்கைகளை சொலல ஆரம்பித்த நேரத்தில், சோடாபுட்டி வீச்சுக்கள், செருப்பு தோரணங்கள், அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் எதிர்ப்புகள் ஏற்பட்டதையெல்லாம் பொருட்படுத்தாமல் சேலம் நடந்த பிறகுகூட—சீமான்கள் கட்சியை விட்டு விலகிய பிறகும்கூட—காந்தியாருக்கே ஒரு பார்ப்பனனால் படுகொலை சம்பவித்தது என்பதைத் தெரிந்துங்கூட— இன்றைக்கும்...நாடு நகரம் பட்டி தொட்டிகளிலெல்லாம் இன முழக்கம் செய்துவரும் பெரியார் ராமசாமியையும் சீர்தூக்கிப் பார்க்கின்ற பொது மக்கள் மடுவுக்கும் மலைக்குமுள்ள வித்தியாசத்தைத்தான் காணமுடியும்.

தோல்வியை ஒப்புக்கொண்ட பிறகும் கூட......திராவிட நாடு சரியில்லை...தமிழர் கழக கொள்கைகளே தமிழ் மக்களை உய்விக்க வந்த உயர்தரக் கொள்கைகள் எனக்கூறிடும் தோழர்...தமிழர்களுக்கு (தான் சரியான பாதையென நினைக்கிற) விடுதலைப் பாதையைக் காட்டாமல், பாதியிலேயே ஓடிவிடுவது அழகல்ல. வேறு பாதையையாவது காட்டி அவ்வழி செல்வோம் என அறிவுறுத்தவேண்டியது விசுவநாதம் போன்ற அறிவாளிகளின் கடமை பொறுப்பு.

"இப்படிப்பட்ட மக்களுக்கென ஒரு கழகம்—ஒரு இதழ் தேவையா !" என்கிறார்.

குறைகளைக் களையத்தானே கழகமும்-இதழும் ஆரம்பித்தார்! 'தேவையா' என்பதை அப்பொழுதே யோசித்திருந்தால் வீணான பொருட்செலவும் வி. வி. ராமசாமி, சௌந்தரபாண்டியன், சாமியப்பா, பி. டி. ராஜன், திரு வி. க., சி. எஸ். ரத்தினசபாபதி ஆகியோரின் விரோதமும் உண்டாகியிருக்காதல்லவா? .... அவர்களை நம்பி ஏமாந்தேன்; என 'தமிழர் நாட்'டில் தலையங்க முகாரி பாட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதல்லவா?

தோல்வியிலே துவண்டுவிட்டார். துவண்டுபோனவர் தன் தோல்விக்குக் காரணத்தைஉணர்ந்து கொண்டால்.........வீணே கலங்கவேண்டியிருக்காது. புலம்பல் ஏற்படாது.

எதிரிகளின் கோட்டையை முற்றுகையிடச் சென்ற திராவிடர் பெரும்படையை வழியிலே மறைத்து வலுவில் போர்தொடுத்தவர்களில் விசுவநாதம் ஒருவர். திராவிடர் படையின் நோக்கத்தை விசுவநாதம் புரிந்திருந்தும் வீணே விபரீத விளையாட்டு விளையாடினார். வீழ்ச்சி கண்டார்.

படைத்தலைவன் மேல் உள்ள பகையுணர்ச்சியால்,நாட்டை மீட்கும் போரிலே...நடுவில் நின்று சதி செய்வது வீரனுக்கு அழகல்ல; என்பது மட்டும விசுவநாதம் அவர்களுக்கு விளங்கியிருந்தால்-வீணே படைவரிசையில் ஒரு பிளவு ஏற்பட்டு எதிரிகளுக்கும் இடங்கொடுத்திருக்காது, தவறிவிட்டார். ஆமாம் தண்ணீர் குடிக்க நினைத்தவன் பாசிப்படியிலேகால்வைத்த கதையாக முடிந்தது தமிழர் கழகத் தொண்டில் இறங்கிய விசுவநாதத்தின் கதை!

தமிழர் ஆதரிக்கவில்லை, ஆகவே தமிழர் கழகப் பணியைநிறுத்தப் போகிறேன் என்றுமட்டும் கூறியிருந்தால் கூட சற்று அழகாயிருக்கும். 'பாவம்' என்று நாமும் அனுதாபம் தெரிவித்திருப்போம.

முழுநேரவேலைசெய்ய தனக்கு வாய்ப்பில்லை என்று கூறுகிறவர்

அதற்குக் காட்டுகிற காரணந்தான் நமக்குசிரிப்பூட்டுகிறது, வருத்தமான கட்டத்தில் கூட வாய்விட்டு சிரித்துவிடவேண்டிய சங்கடத்தை கி. ஆ. பெ. உண்டாக்கிவிட்டார்.

"பெருங்குடும்பத்தின் தொல்லை. நிலச்சாகுபடித் தொல்லை. வெளிநாட்டு வியாபாரத் தொல்லை· உடல் நலக் குறைவு ...."

இப்படி அடுக்கிக்கொண்டே போகிறார்; 'எனது தோல்வி' என்ற தலையங்கத்தில்! மக்காவிலிருந்து மதினா வரையிலே கல்லடிகளை பேற்றுக்கொண்டு ஓடிய முகம்மது நபியைப்பற்றி தெரிந்திருக்கிற விசுவநாதர், இரத்தம் பிழியும் சிலுவையிலே அறையப்பட்ட இயேசுநாதரின் சோக சரித்திரத்தைப் படித்திருக்கிற விசுவநாதம், தானேபடைவீரராய் இருந்துநடத்திய இந்திப்போரில் தாளமுத்து நடராசர்களின் சவங்களைக்கண்ட விசுவநாதம்-பெரியார் பெல்லாரி சிறையிலே சிக்கி நலிந்ததைக்கண்ட விசுவநாதம்—இன்றைக்கும் திராவிடர் கழகத்திலே ஏராளமான இளைஞர்கள் தங்கள் சுகபோகம், சோபித வாழ்வு, சுற்றத்தார்—சொந்தக்காரர் தயவு ஆகியவற்றை உதறித்தள்ளி-கட்சியிலே சிலர் தங்களைக் கருவேப்பிலையாக்கி விடுகிற நிலைமையைக்கூட பொருட்படுத்தாமல்-உயிர் வெல்லமல்ல ....திராவிடர் உயர்வுக்கு உழைப்போம்... பலிபீடம் வரினும் பரிவுடன் ஏற்போம், என குமுறைத்து பெரியார் அணிவகுப்பிலே நிற்கின்ற காட்சியைக் காணுகிற விசுவநாதம், தன்னுடைய சாகுபடியும் வியாபாரமும் கெட்டு விடுகிறது, ஆகவே முழுநேரத் தொண்டு செய்ய வாய்ப்பில்லை என்பது, நாட்டினருக்கு கேலிக்கூத்தாக—சபல மனப்பான்மையாகத் தோன்றுமே என்பதை நினைக்காதது பெருந் தவறு.

தவறிவிட்டார். தவழும் குழந்தை தாழ்வாரத்தில் தவறி வீழ்ந்தால் தாயார் அதைத்தள்ளி விடுவதில்லை. அதைப்போலவே வீழ்ந்துவிட்ட விசுவநாதத்தை—வழுக்கி விழுந்த தோழரை வரவேற்று ஆறுதல் கூறுவதோடு நிற்காமல்..... வீரர் வரிசையிலே இடமளிக்கவும் தயாராயிருக்கிறோம் நாம்.

தமிழர் நாடு—தமிழர் கழகம், இந்த ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு தோல்வி கீதம் பாடுகிற தோழர்.......வெற்றிப் பாதையில்வேகமாகமுன்னேறும் திராவிடர்பெரும்படையில்சேருவதுதான் ஆறுதலுக்கு அருமையான வழி!

அவர்மட்டுமல்ல... சிவஞான கிராமணியார் அவர்களும் 'தமிழ் முரசு' இதழிலே 'எனது தோல்வி' என்ற தலையங்கத்தை எழுதிவிட்டு வருவாரேயானால்......... **விசுவநாத கிராமணியாரை** வரவேற்கத்தயாராயிருக்கிறது திராவிட வாலிபர் படை!

* * *

சுவைத்ததில்!

தனி அரசு:-விருதுநகர். தோழர் ஆசைத்தம்பி அவர்களின் ஆவேச நடை அணையுடைத்தோடுகிறது. அனைவரும் படித்தற்குரியது.

வாழ்வு:-புதுக்கோட்டை. தாழ்வுற்ற திராவிடரை வாழ்விக்க வந்த வாழ்வு! ஆசிரியர் டி. நாராயணன்.

மன்றம்:-சென்னை. தோழர் இரா. நெடுஞ்செழியன் சகோதரர்களை சந்திக்கஒருநல்ல இடம் மன்றம். மக்கள் உள்ளத்து மாசு அகற்ற அரிய பெரிய அறிவு விருந்து!

புது வாழ்வு:-சென்னை. தோழர் க. அன்பழகன் அவர்களின் கலையுள்ளம், தோழர்ராதாமணாளன் அவர்களின் கற்பனையுள்ளம் இவைதான் புதுவாழ்வு!

வெண்மதி:-சென்னை. திருமதி D.S இராசலட்சுமி அவர்களை ஆசிரியாகப் பெற்ற வெண்மதி பெண்களுக்காக பாடுபடுகிறது சிறந்த எண்ணம். சிரிய முயற்சி. பாராட்டுகிறோம்.

வழிகாட்டி:-அருப்புக்கோட்டை தோழர் K. A. புன்னைமுத்து திராவிடர்களுக்கு ஈரோட்டுப் பாதைக்கு வழி காட்டுகிறார். வரவேற்கிறோம்.

உரிமை:-சென்னை. தாழ்த்தப் பட்டோரின் தளையுடைத்து உரிமைபெற உழைக்கும் ஏடு! ஆசிரியர் ஆ. இரத்தினம்.

திருத்தம்.

7-ம் பக்கம், 2-ம் பத்தி 2-ம் பாராவில், பூனை என்பதை 'பூ' என்று படிக்கவும்.

16—2—48 வேளாங்கண்ணி தோழர் வி. க. சோ. வெள்ளிமலை அவர்களின் வாழ்க்கைத் துணைவி தோழியர் புட்பவல்லி அம்மைக்கு பிறந்த ஆண்மகவுக்கு "இளங்கோவன்" என்ற பெயர் சூட்டப்பட்டு முரசொலிக்கு நன்கொடை 1 ரூபாய் அளிக்கப்பட்டது.

* * *

குடந்தை தமிழர் உணவு விடுதி திறப்பு விழாவை முன்னிட்டு முரசொலிக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

எழுதவே வெட்கமாயிருக்கிறது?

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

"அவரவர் நிலைக்கு ஏற்ப அமைந்ததோர் அழகுக்கோலம் தாங்குவது கலை" எனக்கூறுகிற ஆசிரியர், கொள்ளைக்காரன் கொள்ளையடிக்கும் தொழிலைக் கலையாகக் கொள்வதையும், விபசாரி....வாலிபர்களை மயக்கிக் கவிழ்ப்பதைக் கலையாகக் கொள்வதையும், அதற்கென அவர்கள் கம்ப ராமாயணத்தில் தொழிலுக்கேற்ற சுவையான கட்டங்களைத் தேடுவதையும்—அதற்காகவே அவர்கள் கம்பர் கலையை ஏத்திப் புகழ்வதையும் ஒத்துக் கொள்கிறாரா என்பது என் கேள்வி!

"ஒருவர் காட்சி மற்றவர்க்கு ஏலாது" என்கிறார். உண்மை. எரிக்கும் எண்ணம் சுயமரியாதைக்காரர்களுக்கு ஏற்பட இது காரணமாகுமா என்று கேட்கிறேன்.

இனக்கொலை செய்தார் கம்பர். சாதாரண மனிதனை சகத் ரக்ஷகனாக்கிக் காட்டினார் கம்பர்.

கடவுளின் காதையைப் பாட வந்த இடத்திலும் காமலீலைகளுக்கு முதல் ஸ்தானம் அளித்தார் கம்பர்.

இந்தக் குற்றச் சாட்டுகள்தான் கம்பர்கலையைக் கொளுத்தியெறியும் தீக்குச்சுகள் என்பதை குமுதத்தின் வியாசகர்த்தா தெரிந்துகொள்ள வேண்டும்.

கம்பரின் உயிரைக் காப்பாற்ற கட்டுரையாளர், கவிஞர் பாரதிதாசனின் "சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்" ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்திருக்கிறார். இராம பக்தரல்லவா? கம்பரின் வர்ணனைகள் நம்பத்தகாவை என்கிறீர்களே; பாரதிதாசன் பாடியுள்ள சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற கவிதையில் ஒரு பச்சிலையின் உதவியால் இங்கிலாந்து, அமெரிக்கா தேசங்களில் பேசுவோரை குப்பனும் வஞ்சியும் பார்க்க முடிந்தது என்கிறாரே இந்த வர்ணனையை நம்பலாமா? என்கின்ற தோரணையில் தோழர் பிரச்சினையை எழுப்புகிறார். அளவு மீறிய வர்ணனைக்காக கம்பராமாயணத்தை கசக்கிறது என்று கூறியவர்களல்ல நாம்! கூறுபவர்களுமல்ல.

இராமன் அயோத்தியைத் துறந்து ஆரண்யம் சென்றபோது நகரத்து மக்கள் அழுதனர் எனக் கூறுவதோடு நிறுத்தாமல் "பூவையர் அழுதனர் பூனையும் அழுதது" எனக்கம்பர் வர்ணனையை நீட்டியது. கண்டுகூட நாம் வருந்தவில்லை. பூனை அழுமா? என்று கேட்கவுமில்லை. வர்ணனையின் உச்சம் என நாம் விதிவிலக்கு அளித்தோம்.

பூவையர் அழுத கண்ணீர் போகும் பாதையை கம்பர் வர்ணிக்கிற கட்டம்தான், அண்ணாவின் கம்பரசத்திற்கும், அறிவு உலகத்தின் "அக்கினியில் போடு கம்பராமாயணத்தை" என்ற தீர்ப்புக்கும் இடமளித்தது என்பதை தோழர் உட்பட யாரும் மறுக்க முடியாது.

இதுவரை படிக்காமலிருந்தால் பகுத்தறிவாளரைக் குறை கூறும் நண்பர், படித்துப் பார்க்கட்டும் என்பதற்காக எஞ்சியுள்ள கம்பரசத்தில் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கலக்கித் தருகிறேன்; பருகட்டும் தோழர் என்பதற்காக! கலைமயக்கம் தெளியட்டும் என்பதற்காக!

இராமன் காடு செல்கிறான். அயோத்தி அழுகிறது. ஆரணங்குகள் அழுகிறார்கள். அழுதகண்ணீர் ஆறாக ஓடுகிறது பாருங்கள்.

"திடருடைக் குங்குமச் சேறும் சாந்தமும், இடையிடை வண்டலிட்டாரமீர்த்தன. மிடைமுலைக் குவடேறி மேகலைத்தடங் கடலிடைப் புகுந்தகட் குலுழியாறரோ!"

பொழிப்புரையாகக் கூறுவதே போதுமென எண்ணுகிறேன்; அண்ணா அவர்கள் கம்பரசபுத்தகத்தில் அதிக விளக்கம் இருப்பதால் அதைப் படித்துக்கொள்ளட்டும் என்ற அளவில்!

இராமன் பிரிவால் மங்கையர் கண்ணில் வடியும் நீர், ஆறாகப் பெருகி குங்குமத்தையும் மையையும் கரைத்துக்கொண்டு, மணிமாலைகளைக் கடந்து, ஸ்தனங்கள் என்ற மலைகளில் ஏறி மேகலாபரணம் அணிந்திருக்கிற "மறைவிடம்" எனப்படும் கடலில் விழுகிறது.

"எழுதவே வெட்கமாயிருக்கிறது தோழரே!.........இந்தக் காமக்கலை கடவுளின் பேரால் பாடப்பட வேண்டுமா என்று கேட்பது உமக்கு வெறிச்செயலாகப் படுகிறதா?" எனக் கலாரசிகரான என் நண்பரைக் கேட்கிறேன்.

ஒருவேளை "அவரவர் நிலைக்கு ஏற்ப அமைந்ததோர் அழகுக் கோலம் தாங்குவது கலை," என்ற தத்துவத்தைக் கடைப்பிடிப்பவராயிருக்கலாம் நண்பர்!

ஜவஹரைக் கேட்க......!

பாரதிதாசனையும்— கம்பனையும் ஒரே கோட்டில் நிறுத்திப் பார்க்கும் தோழர், பாரதிதாசனின் கவிதையில் இந்தக் காமக் களஞ்சியத்தைக் காணமுடியுமா என்று அறைகூவியழைக்கிறேன். வர்ணனைக்கும் அளவிருக்க வேண்டாமா? அதுவும் பரந்தாமன் சரித்திரத்திலா இந்தப் பள்ளியறைச் சிறப்பு?....

> “கலைஞர். களியர், பித்தர், பக்தர்—இவர்கள் பெரும்பாலும் ஒரு நிலையினர். அவர்களை உணர அவர்களாகவே மாறத்தான் வேண்டும். முடியவில்லை என்றால் ஒதுங்கிவிட வேண்டியதுதான்.”

என்று முடிவு கூறுகிறார் கட்டுரையாளர். கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பவன்.......விவாதத்தை வளர்த்த முடியாமல், நீ பேசுவது விதண்டாவாதங்கள் என்று கூறிவிட்டு ஓடுவதுபோலிருக்கிறது தோழரின் போக்கு! மூக்கையறுத்துக் கொள்ளுங்கள்......கடவுளை தரிசிக்கலாம் எனக் கூறிய மூக்கறையனின் தந்திரத்தைப் போலிருக்கிறது தோழரின் அபிப்பிராயம்.

சொட்டையுள்ள இடத்தை சுட்டிக் காட்டுகிறான் சுயமரியாதைக்காரன். “பொட்டைக் கண் உனக்கு” என்று பொய் கூறுகிறார் நண்பர்!

“கம்பராமாயணத்தில் கடவுளீயம் இல்லை. கதை உண்மையில்லை. இராமன் சாதாரண மனிதன். தமிழ் அழகுக்காக... கலை நுட்பத்திற்காக மட்டும் படியுங்கள்.

இராமனைக் கடவுளென எண்ணி சீதா கல்யாணமும், அனுமாருக்கு வடைமாலை சாற்றும் வைபவமும் நடத்தாதீர்கள்” என்று ஒரு முன்னுரை எழுதிவிட்டு கம்பராமாயணத்தை அச்சிடுவதற்குத் துணியாத தோழர் பெருந்தகை, ...செல்வர் வீட்டுக் குமுதத்திலே சீர்திருத்த வாதியின் மேல் சீற்றம் நடத்துவது ஏனோ தெரியவில்லை.

மக்கள் பண்பு உயர, கலை தேவையே தவிர மாடமாளிகையிலே—மலர்ச் சோலையிலே—மஞ்சத்திலே—மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக்கிடக்க, மங்கையர் வனப்பை வர்ணித்து ஆனந்த லாகிரியில் அமிழ்ந்து கிடக்க, கண்ணீரானது கரை புரண்டு கடலில்கலக்கும்விதத்திற்குஉதாரணம் தேட, கலை தேவையில்லை.

கலை காலத்தின் கண்ணாடியாக ...இன எழுச்சியின் முரசமாக இருக்கவேண்டும். கம்பரின் காதை....காமக் கோட்டத்தின் கீதம். கடவுளீயத்தில் மக்களைக் கவிழ்த்து சதிபுரியும் சிந்து! வேற்றினத்துக்கு வணங்கிச்சாகும் வேதனையைத்தந்த வெண்பா! நான் முதலில் குறிப்பிட்டபடி கலையை நாற்றக் குட்டையாக்கி நெளிகின்றபுழுக்கூட்டம்

சேலம் மகாநாட்டிலே கம்பர் கதையை நெருப்பில் போடவில்லையே தவிர சேதுப்பிள்ளை—பாரதியார் தோல்வி, கம்பராமாயணத்துக்கு மூட்டப்பட்ட தீ என்பதை தோழர் அறியவேண்டும்.

> “காமாலைக் கண்ணின்றி, கலைமாலைக் கண் கொண்டு நோக்கவேண்டும்......இப்படியாக உள்ள சில உண்மைகளை உணராதவரை இராவணன் நம் பாட்டன்தான். சூர்ப்பனகை நம் பாட்டிதான்.”

என்று கிண்டல் செய்து கட்டுரையைமுடிக்கிறார் கம்பபக்தர்!

தோழர் எழுதுவதற்கு இடங்கொடுத்த குமுதத்தின் கௌரவ ஆசிரியர் அழகப்ப செட்டியார் அவர்கள் எப்பொழுதாவது புதுடெல்லிக்குப் போனால் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களைக் கேட்கட்டும்; ராமாயணத்தில் அரக்கர் என்று குறிக்கப்படுவோர் யாரென்ற! “ராமாயணத்தில் அரக்கர் என்று எழுதப்பட்டிருப்பவர் தென்னாட்டிலுள்ள திராவிடர்.” என ஜவஹர்லால் நேரு, செட்டியாரிடம் ..தான் முன்பு தீட்டிய “ஜவஹாலால் தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள்” என்ற புத்தகத்திலிருந்து ஆதாரம் எடுத்துக் காட்டுவார். அப்பொழுது தெரியும்; இராவணன் நம் பாட்டனா; இல்லையா? என்பது எது மறியாத இந்தத் தோழருக்கு; இதைத் தவிர வேறு பதிலில்லை.

ஆசிரியரும்: வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால், கருணாநிதி (மின்னியக்கப்) பதிப்பகம், விஜயபுரம்.